செய்தி வெளியீடு எண் : 2176 நாள் : 31.10.2023

<u>செய்தி வெளியீடு</u>

1.தமிழ்நாட்டில் வாழும் நரிக்குறவர் இனத்தவரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென 2008–ஆம் ஆண்டில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு நரிக்குறவர் நலவாரியம் இறுதியாக 2021–ஆம் ஆண்டில் மூன்றாண்டு காலத்திற்கு திருத்தியமைக்கப்பட்டது.

2.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றிருந்த நரிக்குறவன், குருவிக்காரன் இனத்தினை பழங்குடியினர் பட்டியலில் 37வது இனமாக சேர்த்து வெளியிடப்பட்ட ஒன்றிய அரசின் அறிவிக்கை 17.03.2023 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களை தலைவராகக் கொண்டும் 8 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் நரிக்குறவர் இனத்தைச் சார்ந்த 13 அலுவல் சாரா உறுப்பினர்கள் கொண்டு தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் திருத்தி அமைத்து அரசாணை (நிலை) எண்: 139, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே1(1) துறை, நாள் 30.10.2023–இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3.திருத்தி அமைக்கப்பட்ட இந்நலவாரியம், தமிழ்நாடு நரிக்குறவர் இனத்தவரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தினை கண்காணித்து, இப்பிரிவினர் மேம்பாட்டை உறுதி செய்ய தக்க புதிய திட்டங்கள் அமுல்படுத்துவது குறித்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்கும், என மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**அரசு செயலாளர்,**
**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in